இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

"ஒரு நதியைப் பின்தொடர்ந்து சென்று அதன் ஊற்றைக் கண்டடைவது போல, இசையின் அழகு நம்மை 'அழகின் ஊற்றான' இறைவனைச் சந்திக்க அழைக்கிறது. கடவுள் உங்களுக்குக் கொடுத்துள்ள திறமைகளைத் தொடர்ந்து வளர்த்துக் கொள்ளுங்கள்; அவை உங்களை இறைவனிடம் அழைத்துச் செல்லட்டும்" திருத்தந்தை 14-ஆம் லியோ.

# "நதி தன் ஊற்றை நோக்கிச் செல்வது போல, இசை நம்மை இறைவனிடம் அழைத்துச் செல்கிறது"



காஸ்தெல் கந்தோல்போவில் (Castel Gandolfo) உள்ள போர்கோ லாவ்தாதோ சீ (Borgo Laudato si') திருத்தந்தை தோட்டத்தில் நடைபெற்ற 'அமைதியின் கீதம்' (Canticle of Peace) என்ற ஜெபக் கூட்டத்தில் திருத்தந்தை லியோ கலந்துகொண்டார்.

புகழ்பெற்ற பாடகர் அந்த்ரேயா போச்செல்லி (Andrea Bocelli) மற்றும் உகாண்டா, திருநிலம் (இஸ்ரேல்-பாலஸ்தீனம்), இத்தாலி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த குழந்தைகள் அடங்கிய 'ABF Voices' பாடகர்குழுவினரும் இதில் பங்கேற்றனர்.

இசை நம்மை மறைபொருளின் எல்லைக்கும் அப்பால் அழைத்துச் செல்லக்கூடியது. ஒரு நதியைத் தொடர்ந்து செல்பவர் எப்படி அதன் ஊற்றைச் சென்றடைகிறாரோ, அதேபோல அழகான பாடல்கள் நம்மை இறைவனை நோக்கி வழிநடத்தும். இந்த உலகம் தர முடியாத வாழ்வின் உண்மையான அர்த்தத்தையும் மகிழ்ச்சியையும் அது நமக்குக் கொடுக்கும்.

விவிலியத்தில் கூறப்பட்டுள்ள "வானத்தூதர்கள் மற்றும் புனிதர்களின் குழுவை" நினைவுகூர்ந்த திருத்தந்தை, அவர்கள் "எப்போதும் பாடிக் கொண்டே இருப்பதில்லை" என்றார். மாறாக, இறைவனை அவர்கள் ஒன்றிணைந்து தியானிப்பதிலிருந்தே அவர்களின் பூரண நல்லிணக்கம் வெளிப்படுகிறது. அந்த விண்ணக அமைதியை, நாம் பூமியில் பாடும் இசையும் உணர்த்த முடியும் என்று அவர் கூறினார்.

## திருநிலம் (புனித பூமி), உகாண்டா மற்றும் இத்தாலியிலிருந்து ஒன்றாக...

புனித பிரான்சிஸ் அசிசியாரின் 800-வது விண்ணகப் பிறப்பு விழாவைக் கொண்டாடும் வகையில் இந்நிகழ்வு அமைக்கப்பட்டது. 'லாவ்தாதோ சீ உயர் கல்வி மையம்' மற்றும் 'அந்த்ரேயா போச்செல்லி அறக்கட்டளை' ஆகியவை இணைந்து இதை நடத்தின.

இக்கூட்டத்தில் புனித பிரான்சிஸின் "படைப்புகளின் கீதம்" (Canticle of the Creatures) எழுத்துக்கள், திருவிவிலியப் பகுதிகள் மற்றும் புனித திருத்தந்தை ஆறாம் பால், புனித திருத்தந்தை இரண்டாம் ஜான் பால், திருத்தந்தை பிரான்சிஸ் ஆகியோரின் போதனைகள் வாசிக்கப்பட்டன.

## நதி தன் ஊற்றை நோக்கிச் செல்வது போல...

அந்தப் புதிய நம்பிக்கையை நோக்கிச் செல்வது என்பது ஏதோ ஒன்றை அல்ல, மாறாக 'இறைவனை' கண்டடைவதாகும்.

"ஒரு நதியைப் பின்தொடர்ந்து சென்று அதன் ஊற்றைக் கண்டடைவது போல, இசையின் அழகு நம்மை 'அழகின் ஊற்றான' இறைவனைச் சந்திக்க அழைக்கிறது. கடவுள் உங்களுக்குக் கொடுத்துள்ள திறமைகளைத் தொடர்ந்து வளர்த்துக் கொள்ளுங்கள்; அவை உங்களை இறைவனிடம் அழைத்துச் செல்லட்டும்" என்று திருத்தந்தை கூறினார்.

## உலகின் பொருட்கள் நம் மன நிறைவைத் தர முடியாது

இளைஞர்களின் "தேடலும் துடிப்பும் நிறைந்த இதயங்களைப்" பற்றிப் பேசிய திருத்தந்தை, நம் வாழ்வின் தேடலாகிய ஆண்டவர் மட்டுமே அவர்களுக்கு உண்மையான அமைதியைத் தர முடியும் என்றார்.

"நீங்கள் மாபெரும் காரியங்களுக்காகப் படைக்கப்பட்டவர்கள் என்பதை நினைவில் வையுங்கள். இந்த முழு உலகத்தாலும் உங்கள் வாழ்வின் அர்த்தத்தையும் மகிழ்ச்சியையும் நிறைவு செய்ய முடியாது" என்று அவர் நினைவுறுத்தினார்.

## "திருத்தந்தை உங்களை நேசிக்கிறார், உங்களுக்காக ஜெபிக்கிறார்"

நிகழ்வில் பங்கேற்ற இளைஞர்களுக்குத் திருத்தந்தை லியோ ஒரு தனிப்பட்ட அன்பான செய்தியை அளித்தார்: "திருத்தந்தை உங்களை நேசிக்கிறார்; உங்களுக்காகவும், உங்கள் குடும்பங்களுக்காகவும், உங்கள் நாடுகளுக்காகவும் ஜெபிக்கிறார்."

அவரது வார்த்தைகள் உலக அமைதிக்கான ஜெபமாக மாறியது. "வன்முறையால் தொடர்ந்து துன்புறும் உலகின் அனைத்துப் பகுதிகளிலும்" அமைதி நிலவ வேண்டும் என்று அவர் இறைஞ்சினார். திருத்தந்தையோடு இணைந்து ஜெபித்த இந்தத் தருணம், அந்தப் பாடகர் சிறுவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் மறக்க முடியாத ஒன்றாக அமைந்தது. இசைப் பயிற்சியின் வழியே நட்பு, சகோதரத்துவம் மற்றும் அன்பைப் பகிர்ந்துகொண்ட 10 நாள் பயணத்தின் உச்சக்கட்டமாக இந்நிகழ்வு திகழ்ந்தது.

தமிழாக்கம் ஹெரால்டு

# மலேசியப் போதக மாநாட்டிற்கான (MPC) திட்டமிடலும் ஆயத்தங்களும்

பிளெண்டோங், ஜொகூர்:

ரோம் நகருக்கான தங்களின் சமீபத்திய 'அட் லிமினா அபோஸ்தலோரும்' (Ad Limina Apostolorum) திருப்பயணத்தின் நற்பலன்கள் மற்றும் மலேசியப் போதக மாநாட்டிற்கான (MPC2026) இறுதி ஆயத்தங்கள் ஆகியவை, ஜூலை மாதம் மஜோடி மையத்தில் (MAJODI Centre) நடைபெற்ற மலேசியா, சிங்கப்பூர் மற்றும் புரூனை கத்தோலிக்க ஆயர்கள் பேரவையின் (CBCMSB) 118-வது பொதுக் கூட்டத்தில் முதன்மை விவாதப் பொருளாக அமைந்தன.

இந்தக் கூட்டத்தில் ஆயர்கள் ஒன்றுகூடி, திருத்தந்தையுடனான சந்திப்பு மற்றும் ரோமானியச் செயலகங்களுடனான (Roman Curia) கலந்துரையாடல்கள் குறித்துத் தியானித்தனர். மேலும், வரும் செப்டம்பர் 9 முதல் 13 வரை சரவாக்கில் உள்ள சிபுவில் (Sibu, Sarawak) நடைபெறவிருக்கும் மலேசியக் கத்தோலிக்கத் திருச்சபையின் வரலாற்றுச் சிறப்புமிக்க முதல் தேசியப் போதக மாநாட்டிற்கான திட்டங்களையும் அவர்கள் ஆய்வு செய்தனர்.

## அட் லிமினா திருப்பயணம் குறித்த தியானம்

கடந்த மே மாதம் ரோம் நகருக்கு மேற்கொண்ட 'அட் லிமினா அபோஸ்தலோரும்' திருப்பயணத்தின் அனுபவங்களை ஆயர்கள் தங்களுக்குள் பகிர்ந்து கொண்டனர். ஆன்மீக ரீதியில் பெரிதும் வளமூட்டிய, அதே வேளையில் மிகுந்த உழைப்பைக் கோரிய ஒரு பயணமாக இது அமைந்ததாகப் பலர் குறிப்பிட்டனர்.

வத்திகான் செயலகங்களுடனான சந்திப்புகள் வெளிப்படைத்தன்மையுடனும், ஆயர் மேய்ப்புப் பணியின் நல்நோக்கோடும் அமைந்ததற்காகப் பெரிதும் பாராட்டப்பட்டன. இதற்கு முன்னர் 2008 மற்றும் 2018-ஆம் ஆண்டுகளில் அட் லிமினா பயணங்களில் பங்கேற்ற சில ஆயர்கள், இந்த ஆண்டின் திருப்பயணம் மிகவும் சிறப்புற ஒருங்கிணைக்கப்பட்டிருந்ததாகக் குறிப்பிட்டனர். குறிப்பாக, வரவேற்கும் சூழலும், ஆங்கில மொழியின் அதிகப்படியான பயன்பாடும் உரையாடலை எளிதாக்கியதாக அவர்கள் சுட்டிக்காட்டினர்.

மேலும், ரோமின் நான்கு முதன்மைப் பேராலயங்களில் திருப்பலி நிறைவேற்றவும், புனித மரியன்னை முதன்மைப் பேராலயத்தில் (Papal Basilica of Saint Mary Major) அமைந்துள்ள மறைமாவட்டத் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் கல்லறையில் செபிக்கவும் கிடைத்த வாய்ப்பை ஆயர்கள் நன்றியோடு நினைவுகூர்ந்தனர். இந்தத் திருப்பயணத்தின் மிக முக்கியமான நிகழ்வு, திருத்தந்தை லியோ அவர்களுடனான தனிப்பட்ட சந்திப்பாகும். நீண்ட நேரக் காத்திருப்புக்குச் பின் அமைந்தாலும், இந்த 90 நிமிடச் சந்திப்பில் ஒவ்வொரு ஆயரும் திருத்தந்தையோடு நேரில் பேசும் வாய்ப்பைப் பெற்றனர்.

இந்தச் சந்திப்பைப் பற்றிச் சிங்கப்பூர் பேராயர் கர்தினால் வில்லியம் கோ கருத்துத் தெரிவிக்கையில்: “நமது ஆயர் பேரவை சிறியதாக இருப்பது நமக்குக் கிடைத்த நல்வாய்ப்பாகும். நேரக் குறைவு காரணமாகச் சில ஆயர்கள் மட்டுமே பேசக்கூடிய பெரிய பேரவைகளைப் போலன்றி, நாம் அனைவரும் கேள்விகளைக் கேட்கவும் நேரடி உரையாடலில் ஈடுபடவும் முடிந்தது,” எனக் குறிப்பிட்டார்.

## MPC2026 மாநாட்டிற்கான இறுதி ஆயத்தங்கள்

மலாக்கா ஜொகூர் மறைமாவட்டத்தின் மோன்சினியர் பீட்டர் எங் (Msgr Peter Ng) தலைமையிலான மத்தியச் செயற்குழு, மலேசியப் போதக மாநாடு 2026 பற்றிய முழுமையான முன்னேற்ற அறிக்கையை இந்தப் பொதுக் கூட்டத்தில் சமர்ப்பித்தது.

ஐந்து நாட்கள் நடைபெறவிருக்கும் இம்மாநாட்டின் இறுதி நிரலைச் செயற்குழு அளித்தது. இதில் வழிபாட்டு நிகழ்வுகள், செபம், அமைதியான தியானம், முதன்மை உரைகள் மற்றும் கூட்டு விவேகப் பகிர்வுச் (communal discernment) அமர்வுகள் ஆகியவற்றின் அட்டவணை இடம் பெற்றிருந்தது.

வரும் செப்டம்பர் 4-ஆம் தேதி, மலேசியாவின் ஒன்பது மறைமாவட்டங்களிலும் உள்ள அனைத்துப் பங்கிலும் 'நற்கருணை ஆராதனை' அல்லது சிறப்புச் செபக் கூட்டத்தை நடத்துமாறு ஆயர்கள் ஊக்கப்படுத்தினர். இதன் மூலம் இம்மாநாடு, அதில் பங்கேற்பாளர்கள் மற்றும் மலேசியத் திருஅவையின் எதிர்காலம் ஆகியவற்றைத் தூய ஆவியாரின் வழிநடத்துதலில் ஒப்படைக்குமாறு கேட்டுக்கொண்டனர்.

“மலேசியாவில் உள்ள கத்தோலிக்கத் திருஅவையானது அருள்பணியாளர்கள், துறவிகள் மற்றும் இறைமக்கள் அனைவரும் ஒன்றிணைந்து ஆண்டவரின் ஒளியில் கொண்டாடவும், செவிமடுக்கவும், பயணிக்கவும் கூடிவருகிறது” என்ற நோக்குடன் இம்மாநாடு நடைபெறுகிறது. இறைமக்களிடையே நற்செய்திப் பணியை வலுப்படுத்துவதே இதன் முதன்மை இலக்காகும். மூவொரு இறைவனின் வாழ்வில் வேரூன்றிய மலேசியத் திருஅவை, மக்களின் குரலாக மாறவும், இரக்கத்தோடு கரங்களை நீட்டவும், வாழ்வின் நிறைவைப் பகிர்ந்தளிக்கவும், புனிதத்தில் வளரவும் இம்மாநாடு அழைப்பு விடுக்கிறது.

ஆயர்கள், அருள்பணியாளர்கள், துறவிகள், இறைமக்கள் பிரதிநிதிகள், பேச்சாளர்கள், விருந்தினர்கள் மற்றும் தன்னார்வலர்கள் உட்பட ஏறத்தாழ 890 பங்கேற்பாளர்கள் இதில் கலந்துகொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. இதுவே மலேசியக் கத்தோலிக்கத் திருஅவையால் ஏற்பாடு செய்யப்படும் மிகப்பெரிய தேசிய அளவிலான கூட்டமாகும்.

இதற்கான ஆயத்தப் பணிகளைச் சிபு மறைமாவட்டம் ஒருங்கிணைத்து வருகிறது. போக்குவரத்து, தங்குமிடம் மற்றும் விருந்தோம்பல் போன்ற மேலாண்மைப் பணிகளில் நாடு முழுவதிலும் உள்ள பங்குமக்களும் தன்னார்வலர்களும் உதவி வருகின்றனர்.

மாநாட்டின் தொடக்க நாளில் மிகவும் எதிர்பார்க்கப்படும் தருணங்களில் ஒன்று நிகழவுள்ளது. 'சிலுவைப் பயணம்' (Perjalanan Salib) என்ற நிகழ்வின் பகுதியாக, மலேசியாவின் ஒன்பது மறைமாவட்டங்கள் வழியாகப் பயணித்த ஒன்பது மரச் சிலுவைகள் இம்மாநாட்டில் மீண்டும் ஒன்றிணைக்கப்படும்.

இந்தச் சிலுவைகளின் ஆன்மீகப் பயணம் 2025 ஏப்ரல் 3 அன்று கோத்தா கினபாலுவில் உள்ள திரு இருதயப் பேராலயத்தில் தொடங்கியது. சிபுவில் அவை மீண்டும் ஒன்றிணைவது தீபகற்ப மலேசியா, சபா மற்றும் சரவாக் ஆகிய பகுதிகளில் உள்ள திருஅவையின் ஒற்றுமையைப் பறைசாற்றும். இது ஒரே கிறிஸ்துவ உடலில் பலதரப்பட்ட கலாச்சாரங்கள், மொழிகள் மற்றும் பாரம்பரியங்களின் அழகைப் பிரதிபலிப்பதாக அமையும்.

கூட்டத்தின் நிறைவில், கடந்த ஓராண்டாகப் அர்ப்பணிப்போடு பணியாற்றிய MPC மத்தியச் செயற்குழுவிற்கும் அதன் துணைக்குழுக்களுக்கும் ஆயர்கள் தங்களது நன்றியையும் பாராட்டுகளையும் தெரிவித்தனர். மேலும், இம்மாநாட்டில் பங்கேற்கும் அனைவருக்கும் தூய ஆவியாரின் ஆசிகள் மிகுதியாகக் கிடைக்க மலேசியக் கத்தோலிக்க மக்கள் அனைவரும் தங்களின் செபங்களில் நினைவுகூருமாறு வேண்டுகோள் விடுத்தனர்.

செய்தி: ரிச்சர்ட் சியா

# புனித மிக்கேல் தேவாலய பங்கு தமிழ் அப்போஸ்தர் குழுவின் 50 ஆண்டு பொன்விழா

ஜூன் 26 வெள்ளிக்கிழமையன்று அலோர் ஸ்டார் புனித மிக்கேல் தேவாலயத்தில் பங்கு தமிழ் அப்போஸ்தர் குழுவின் 50 ஆண்டு பொன்விழா சிறப்பாக கொண்டாடப்பட்டது. முதலாவதாக, மாலை 6:00 மணிக்கு குருவானவர்கள் அருட்பணி பிரான்சிஸ் சேவியர் மற்றும் அருட்பணி நெல்சன் ஜோசப் அவர்களால் தமிழ் திருப்பலி கொண்டாடப்பட்டது.

இத்திருப்பலியைத் தொடர்ந்து, கத்தோலிக்க மண்டபத்தில் ஆரம்ப ஜெபத்தோடு தொடங்கி, குத்துவிளக்கு ஏற்றி, திறப்புரை ஆற்றி அதிகாரபூர்வமாக இந்நிகழ்வைத் தொடக்கி வைத்தார் பங்கு குருவானவர் அருட்பணி மைக்கல் சியா அவர்கள்.

1976-ஆம் ஆண்டு தமிழ் அப்போஸ்தலக் குழுவின் முதல் தலைவரான திரு சவரியப்பன் அவர்கள் பொன்னாடை போர்த்தி, மாலை அணிவித்துக் கௌரவிக்கப்பட்டார். அவரோடு சேர்த்து அப்போது இருந்த அப்போஸ்தலர் குழுவின் சக உறுப்பினரான திரு. மெத்தியு அவர்களுக்கும் மாலை அணிவித்து தங்கள் அன்பைப் பகிர்ந்து கொண்டனர் இப்போதைய குழுவினர்.

தொடர்ந்து, மறைக்கல்வி மாணவர்களின் கண்கவர் நடனம், திரு சவரியப்பன் அவர்களின் சிறப்புரை, இப்போதைய இக்குழுவின் தலைவர் திரு. ரோன் அவர்களின் நன்றியுரை எனத் தொடர்ந்த இந்நிகழ்வில் முத்தாய் மின்னியது பொன்விழாவின் புத்தக வெளியீட்டு விழா. இந்த 50 வருட காலமாக அப்போஸ்தலர் குழுவில் பணியாற்றிய தலைவர்களுக்கும் உறுப்பினர்களுக்கும் நினைவுச் சின்னங்கள் வழங்கப்பட்டன. இப்படி பல இனிய நினைவுகளால் நிரம்பிய இக்கொண்டாட்டம் இரவு 8:30 மணிக்கு விருந்துபசரிப்போடு இனிதே முடிவுற்றது.

எழுத்து: திருமதி. விக்டோரியா ஜோசப் (அலோர் ஸ்டார்)





# மலரும் மண உறவு வார இறுதிப் பயிற்சி அனுபவம்

கடந்த ஜூலை 10-12, 2026 அன்று டேய்ஸ் ஹோட்டல் மையத்தில் 'மலரும் மண உறவு வார' இறுதிப் பயிற்சியில் ஏழு தம்பதியர் கலந்துப் பயன்பெற்றனர். பங்குகொண்டவர்களின் அனுபவத்தை இங்குப் பகிர்ந்துகொள்கிறோம்.

**மரியதாஸ் & சுமதி**

எங்களுக்கு திருமணமாகி 22 ஆண்டுகள் ஆகின்றன. எத்தனையோ ஏற்றத் தாழ்வுகளைக் கண்ட எங்களின் இல்லற வாழ்க்கையை, இந்த 3 நாள் ME-195 முற்றிலும் அழகாக மாற்றியமைத்துள்ளது. இப்பயிற்சியின் மூலம் எங்களிடையே அன்பு, ஆழமான புரிதல், மன்னிப்பு மற்றும் பரஸ்பர மரியாதை இன்னும் அதிகரித்துள்ளது. இதனை இறைவன் எங்களுக்கு அளித்த அரிய வரமாகவே கருதுகிறோம்.

**மெர்வின் ராஜ் & ராசாத்தி**

நாங்கள் 10 ஆண்டுகளாக ஒருவரையொருவர் ஆழமாகக் காதலித்து வருகிறோம். ஆரம்பத்தில் எங்களிடையே இருந்த நெருக்கம், குழந்தை வளர்ப்பு மற்றும் நிதிச் சுமைகளால் காலப்போக்கில் சற்று தூரமாக மாறியது. ஆனால், இந்த ME-195 மூலம் எங்களுக்கிடையில் இருந்த மௌனமும் இடைவெளியும் உடைந்து, எங்களின் அன்பு முன்பை விட இன்னும் பலமடைந்துள்ளது.

**தோமஸ் & மேரி**

எங்களுக்கிடையே பெரிய மனமாற்றத்தை ஏற்படுத்தி, ஒருவரையொருவர் புதிய கோணத்தில் பார்க்க உதவியுள்ளது. தினசரி வாழ்வில் ஒருவருக்கொருவர் அன்போடு செவிமடுக்கவும், உண்மையாகவும் நேர்மையாகவும் பேசவும், பரஸ்பரம் பாராட்டுவது எவ்வளவு முக்கியம் என்பதையும் உணர்த்தியுள்ளது. திருமணம் என்பது வெறும் சேர்ந்து வாழ்வது மட்டுமல்ல; அன்பு, பொறுமை, மன்னிப்பு மற்றும் இறைவனின் வழிகாட்டுதலோடு இணைந்து வளர்வதே ஆகும் என்பதை இது நினைவூட்டியுள்ளது. சோதனையான காலங்களிலும் திறந்த மனதுடன் பேசி, இறைவனைத் தங்களின் வாழ்வின் மையமாகக் கொள்ளும்போது எந்தவொரு சவாலையும் வெல்ல முடியும் என்ற நம்பிக்கை பிறந்துள்ளது.

**செர்வின் & கஸ்னரி**

எங்கள் இருவருக்கும் ME வார இறுதிப் பயிற்சியில் கலந்து கொள்வதற்கு முன்பு, இந்த நிகழ்வைப் பற்றி எங்களுக்கு எந்த ஒரு புரிதலும் இல்லை. ஆனால், ME நிகழ்வில் கலந்து கொண்ட பிறகு, ஆன்மீக வாழ்க்கையில் திருமணம் என்பதன் பொருள் என்ன என்றும், கணவன் மனைவிக்கு இடையேயான உறவைப் பற்றியும் நாங்கள் நன்றாகப் புரிந்து கொண்டோம். எங்களது வாழ்க்கையை இன்னும் சிறப்பாக மாற்றுவதற்கு எங்கு, மேம்படுத்த வேண்டும் என்பதையும் இது எங்களுக்குக் காட்டியுள்ளது.

**லாசர் அந்தோணி & ஏஞ்சலின் தாஸ்**

13 வருட காலப் பரிச்சயத்திற்குப் பிறகும், உலகளாவிய திருமண சந்திப்பு (Worldwide Marriage Encounter) எங்களுக்குள் ஒரு புதிய தொடக்கத்தையும், இன்னும் ஆழமானப் புரிதலையும் ஏற்படுத்தியது.

அன்பு, நம்பிக்கை, ஜெபம், மன்னிப்பு மற்றும் நேர்மையான உரையாடல், இவைதான் ஒரு மகிழ்ச்சியான திருமண வாழ்க்கையின் உண்மையான தூண்கள் என்பதை நாங்கள் உணர்ந்துகொண்டோம்.

**ஜோலி வின்சென்ட் & நாத்தலினா**

பரபரப்பான வாழ்க்கைக்கு மத்தியில், எங்களின் அன்றாடப் பொறுப்புகளிலிருந்து விலகி, ஒருவருக்கொருவர் உண்மையாகச் செவிசாய்க்கவும், எங்களது உணர்வுகளையும் கனவுகளையும் ஆழமாகப் புரிந்துகொள்ளவும் இந்த மூன்று நாட்கள் எங்களுக்கு ஒரு அற்புதமான வாய்ப்பாக அமைந்தன.

திருமணம் என்பது வெறுமனே ஒன்றாக வாழ்வது மட்டுமல்ல அது ஒன்றாக வளர்வது. ஒவ்வொரு நாளும் ஒருவர் மற்றவருக்கு முன்னுரிமை கொடுப்பது, மற்றும் இறுதிவரை இறைவனுடன் கைகோர்த்து நடப்பது என்பதை இந்த வார அனுபவம் எங்களுக்கு மீண்டும் நினைவூட்டியது.

**மைக்கல் & நேசா**

இந்த வார இறுதியில் ஒருவருக்கொருவர் எதையும் மனம் விட்டுப் பேசலாம் என்ற துணிவையும் ஒருவருக்கொருவர் நிபந்தனையின்றி அன்பு செய்யும் வழியையும் கற்றுக்கொண்டோம்.

திருமணமான ஒவ்வொரு தம்பதியினரும் தங்கள் திருமண உறவை வலுப்படுத்த இந்த 'திருமண சந்திப்பு' நிகழ்ச்சியில் பங்கேற்க வேண்டும் என்று நாங்கள் மனதார ஊக்குவிக்கிறோம்.

மலரும் மண உறவு வார இறுதி குழுவினர் (தமிழ்)

# பொதுக்காலம் 19ஆம் வாரம்

**1 அரசர் 19:9, 11-13, உரோ 9:1-5, மத் 14:22-33**

## “அஞ்சாதீர்”

கத்தோலிக்க திருஅவை இன்று பொதுக்காலத்தின் 19ஆம் வாரத்தைக் கொண்டாடுகிறது. முதல் வாசகத்தில் இறைவாக்கினர் எலியா கடவுளைச் சந்திக்கும் நிகழ்வை வாசிக்கிறோம். நெருப்பு. புயல், நில நடுக்கம், ஏற்பட்ட போதிலும் மெல்லியக் காற்று வழியாகத்தான் இறைவனின் பிரசன்னத்தை உணர்கிறார்.

இரண்டாம் வாசகத்தில் புனித பவுல் கிறிஸ்து எல்லாவற்றிற்கும் மேலான கடவுள். என்றென்றும் அவர் புகழத்தக்கவர். கிறிஸ்து தம்மில் எத்தகையவர் என்பதை விட அவர் நமக்காக என்ன செய்தார் என்பதையே வலியுறுத்தும் செய்தியை அறியமுடிகிறது.

நற்செய்தியில் கடல் கொந்தளிப்பில் மருண்டு தவிக்கும் தம் சீடர்களை தேற்றும் நிகழ்ச்சியை வாசிக்கிறோம்.

நடுக்கடலில் அலைகள் கடுமையாக படகை தாக்குகின்றன. அந்நேரத்தில் இயேசு கடல் தண்ணீர் மீது நடந்து வருகின்றார். பேயோ, பூதமோ என அவர்கள் அலறுகிறார்கள்.

“துணிவோடு இருங்கள். நான்தான். அஞ்சாதீர்கள்” என கூறி அவர்களை திடப்படுத்துகிறார்.

சிறுபிள்ளைத்தனமான பேதுருவோ, நீர்தான் என்றால் அவரை நோக்கி நடந்துவர ஆணையிடுமாறு கேட்டு, நடந்து செல்ல, அப்பொழுது பெருங்காற்று வீசவே அவர் மூழ்கும் தருவாயில், “ஆண்டவரே என்னைக் காப்பாற்றும்” என கத்துகிறார். இயேசுவும் கரத்தை நீட்டி அவரை தூக்கிவிடுகிறார்.

அது போலத்தான் நமது வாழ்க்கையில் துன்பம் துக்கம் துயரம் என பிரச்சனைகளைச் சந்திக்கும் போது சிக்கல் தோன்றுகின்றன. நம்பிக்கையில் தளர்ச்சி அடைகின்றோம். மாறாக நம் ஆண்டவர் இயேசு பேதுருவை கரம் கொடுத்து தூக்கி விட்டது போல நம்மையும் தூக்கி விட்டுக்கொண்டிருக்கிறார் என்பதை உணருகிறோமா?

அற்புதங்களையும், வல்ல செயல்களையும் அடையாளச் செயல்கலாகத்தான் இயேசு செய்தார். இந்த அறுங்குறிகள் மனிதரின் நம்பிக்கை உணர்வுகளைத் தட்டி எழுப்புவதற்காகவே செய்யப்பட்டன.

இன்று ஆங்காங்கு, அவ்வப்போது நிகழ்கின்ற புதுமைகளையும் அருங்குறிகளைத்தான் பார்க்க துடிக்கின்றனர்.

சாட்சியம்:

சிறுவயது முதலே, திக்குவாயான என்னை, “அஞ்சாதே, ஒருநாளைக்கு இயேசு, உன்னை நன்றாக பேசும் அருளை பொழிவார். அப்பொழுது நீ அவரின் மகிமை எடுத்துச் சொல்லுவாய்” என தம் தாயாரின் விடா முயற்சியின் மன்றாட்டினால் இப்பொழுது நன்றாகவே பேசுகிறேன். அவருக்கு சாட்சியம் கூறுகிறேன், என அருள்பணியாளர் குழந்தை யேசு ராஜன் கூறினார்.

ஆம் தயங்காது, அஞ்சாது, பின்வாங்காது ஆண்டவரே சரணம் என முழுமையாக நம்புவோம். சீடத்துவத்தை ஆழப்படுத்துவோம்.

“ஆண்டவரே, என் ஆயன், எனக்கேதும் குறையில்லை” என்கிற சங்கீதக் காரரின் பாடலை எத்தனைமுறை முனுமுனுத்திருப்போம்.

வானத்தூதர் “மரியா, அஞ்ச வேண்டாம் கடவுளின் அருளைக் கண்டடைந்துள்ளீர்” என திடப்படுத்தியுள்ள வாக்கையும் மனதில் கொள்ளுவோம்.

ஆ.வி.டேவிட்

**பங்குச் செய்திகளை அனுப்ப அழைக்கிறோம்**

உங்களின் கட்டுரைகள், கருத்துக்கள், பகிர்வுகள், பங்குச் செய்திகளை நாங்கள் பெரிதும் வரவேற்கிறோம். 400-500 சொற்களுக்குள் அமைந்த கட்டுரைகள், அவற்றுக்கான விளக்கக் குறிப்புகளுடன் (caption) கூடிய உயர் தெளிவுத்திறன் (HD) கொண்ட JPG அல்லது PNG வடிவத்திலான புகைப்படங்கள் ஆகியவற்றை அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

உங்களது கட்டுரைகளை பின்வரும் மின்னஞ்சல் முகவரிக்கு அல்லது வாட்ஸ்அப் எண்ணிற்கு அனுப்பி வைக்கலாம்:

மின்னஞ்சல்: tamil@herald.com.my வாட்ஸ்அப்: 012-5599015